112. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 651 ஆம் இலக்கம் கொண்ட கித்துல்ஹிற்றியாவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ராமதகல் ஸ்ரீ காசியப்ப விகாரையில் அமைந்துள்ள கற்றூண்களுடனான புராதன புத்தர் கட்டடம்.

113. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 648 ஆம் இலக்கம் கொண்ட கொட்டாகல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த கொட்டஸற பியங்கல ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள நீர்வடி வெட்டப்பட்ட கற்குகைகள்.

114. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 611 ஆம் இலக்கம் கொண்ட மாமினியாவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த மாமினியாவ ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள புராதன தூபி

115. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 633 ஆம் இலக்கம் கொண்ட மெதவெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த கினிஹிரிகந்த ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள நீர்வடி வெட்டப்பட்ட குகைகளும் திருப்பாதக் கல்லும்.

116. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 623 ஆம் இலக்கம் கொண்ட கறுக்கன்குளம் கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த தாதுசேன ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள கற்பார் மீதமைந்த நீர்வடி வெட்டப்பட்ட கற்குகையும் திருப் பாதமும்.

117. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 632 ஆம் இலக்கம் கொண்ட அம்புல்கஸ்வெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ஹித்தகெம ஆரண்ய சேனாசனவில் அமைந்துள்ள பிராஹ்மி எழுத்துக்களுடனான நீர்வடி வெட்டப்பட்ட குகைகள், புராதனக் கட்டடங்கள்.

118. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 624 ஆம் இலக்கம் கொண்ட மயிலகஸ்வெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த சந்தகல்பாய ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள கற்பார் மீதமைந்த படிக்கல் வரிசையும் கல்வெட்டும் நீர்வடி வெட்டப்பட்ட குகையும் தூபி இடிபாடும் பிரகாரமும்.

119. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் தளாவை பிரதேச செயலாளர் பிரிவில், 386 ஆம் இலக்கம் கொண்ட கட்டியாவ யாய 1 ஆம் கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த நவகல ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள புராதன தாகபைகள் இரண்டு.

120. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் தளாவை பிரதேச செயலாளர் பிரிவில், 386 ஆம் இலக்கம் கொண்ட கட்டியாவ யாய 7-துலான கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ஸ்ரீ சுமனகிரி ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள நீர்வடி வெட்டப்பட்ட கற்குகை, தூண் குழிகளும் கற்பாறை மீதமைந்துள்ள நாக உருவமும் வடிகாலும் புராதன தெப்பக் குளமும்.

121. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் தளாவை பிரதேச செயலாளர் பிரிவில், 381 ஆம் இலக்கம் கொண்ட மெதகம துலான கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த அளுத்வெவ போதிருக்காராம விகாரையில் அமைந்துள்ள அத்தாணி கல்வெட்டு.

122. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் மகாவிலாச்சி பிரதேச செயலாளர் பிரிவில், 371 ஆம் இலக்கம் கொண்ட நவோதாகம கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ஸ்ரீ மதுரசிறி விகாரையில் அமைந்துள்ள கற்றூண்கள் கொண்டமைந்த கட்டட இடிபாடுகள்.

123. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் றம்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், 103 ஆம் இலக்கம் கொண்ட திவ்விய உடபெந்தவெவ துலான கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த கட ஹத்த எனப்படும் இடத்திலுள்ள புராதன தாகபை, டெம்பிற்ற விகாரை, கட்டட இடிபாடுகளும் தெப்பக் குளமும் கொண்ட கற்பாறை.

124. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் தம்புத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில், 436 ஆம் இலக்கம் கொண்ட தெல்னேகம கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ஒறுகல யாய குடாகல் விகாரையில் அமைந்துள்ள ஒறுகொட யாய குடாகல் விகாரைத் திருப்பாதமும் கற்பாறை மீதுள்ள கல்வெட்டுக்களும்.

125. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவில், 354 ஆம் இலக்கம் கொண்ட ஒத்தப்புவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ஒத்தப்புவ பன்சலையில் அமைந்துள்ள புராதன தாகபை, விகாரை மண்டபமும் கற்பாறையில் உள்ள திருப்பாதமும் நீர்வடி வெட்டப்பட்ட குகைகளும்.

126. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவில், உள்ள அடம்பன் கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த தெமற்றமல் புராதன விகாரையில் அமைந்துள்ள மிகப் புராதன கட்டடமும் தாகபையும் நீர்வடி வெட்டப்பட்ட குகைகளும் கல்வெட்டுக் களும், புராதன கற்சிலையும்.

127. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெப்பித்திகொல்லாவை பிரதேச செயலாளர் பிரிவில், 26 ஆம் இலக்கம் கொண்ட துன்சுட்டுவ கிராம உத்தியோகத்தர் வசம் துட்டுவெவ கிராமத்தில் அமைந்த துட்டுவெவ புராதன விகாரையில் அமைந்துள்ள புராதன தாகபை.

128. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் திறப்பனை பிரதேச செயலாளர் பிரிவில், 534 ஆம் இலக்கம் கொண்ட புதிய புளியங்குளம் கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த கெமுனு சைத்தியாராமய எனப்படும் இடத்தில் அமைந்துள்ள புராதன தாகபையும் பிரகாரமும்.

மேற்கூறப்பட்ட கட்டளைக்கு எதிரான எதிர்ப்புக்களுக்கான காரணங்கள் ஏதேனும் இருப்பின் அத்தகைய எதிர்ப்பினை 2008 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 7 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக ''பணிப்பாளர் நாயகம், புதைபொருட்கள் திணைக்களம், கொழும்பு 7'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய எதிர்ப்புகள் ஒவ்வொன்றும் எழுத்துமூலமாக முன்வைக்கப்படல் வேண்டும் என்பதுடன், அக்கடிதம் எதிர்ப்பிற்கான பிரகடனத்தையும் அதற்கான காரணங்களையும் விளக்கமாகக் கொண்டிருத்தலும் வேண்டும்.

மகிந்த யாப்பா அபேவர்தன,
கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள்
பற்றிய அமைச்சர்.

கொழும்பு,
2008.10.03.

10-521

---

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம்**

*மின்சக்தி, வலு அமைச்சு*

***இலங்கை மின்சார சபை***

***மேல் கொத்மலை நீர்மின் திட்டம்***

*கூறு 4 – மின்னுற்பத்தி உபகரணங்கள்*
*இ.மி.ச. ஒப்பந்த இல. : UKHP/05/ 2005/LOT 4/ JBIC*

இலங்கை மின்சார சபையானது சர்வதேச ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியின் நிதியுதவியுடன் மேல் கொத்மலை நீர்மின் திட்டத்தின் கூறு 4 - மின்னுற்பத்தி உபகரணங்களுக்கான ஒப்பந்த வேலைகளை வழங்கியுள்ளது.

ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் பின்வருமாறு :

(அ) கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள உபகரணங்களின் விபரங்கள் : மேல் கொத்மலை நீர்மின் திட்டத்தின் கீழ் கூறு 4- மின்னுற்பத்தி உபகரணங் கள்

கூறு 4 – மின்னுற்பத்தி உபகரணங்கள் ஒப்பந்த வேலைகளின் கீழ் காணப்படும் பிரதான விடயங்கள்.

(i) சுழலி :
பிரான்சிஸ் வகை, நிலைக்குத்தான, சுருளி வடிவான இரு சுழலிகளும் அதற்கான உதிரி உபகரணங்களும்.

(ii) மின்பிறப்பாக்கி :
88 கி. வோல்ட் அம்பியர், 3 படிநிலை, நிலைக்குத்தான, ஒருங்கிணைந்த மின்பிறப்பாக்கி, மற்றும் அதன் உதிரி உபகரணங்கள், மற்றும் தூண்டற் தொகுதி, நடுநிலை புவித்தொடுப்பு பாகம்.

(iii) மேலாக அசையும் பாரம்தூக்கி :
135 தொன் கொள்ளளவுடைய மேலே கிடையாக அசையும் பாரம்தூக்கி.

(iv) மின்மாற்றிகள் :
இரு தொகுதி உள்ளக எண்ணெய்யில் அமிழ்த்தப்பட்ட, வலு மின்மாற்றிகள், காபனீரொட்சைட்டு தீயணைப்புத் தொகுதி மற்றும் எண்ணெய் சுத்திகரிப்புத் தொகுதி.

(v) ஆளித்தள உபகரணங்கள் மற்றும் மின் வடம் :
$SF_6$ வாயு பொருத்தப்பட்ட உலோக உறையிடப்பட்ட ஆளிமாற்றி மற்றும் பாரம்பரிய ஆளிமாற்றியுடன் கூடிய 220 கிலோ வோல்ட் ஆளித்தளம், பொலியெதிலீன் (XLPE) காவலியிடப்பட்ட 220 கிலோ வோல்ட் வடம்.

(vi) மின் நிலைய உபகரணங்கள்:
கட்டுப்பாட்டு உபகரணங்கள், பாதுகாப்பு தொடரி, நீர் மட்ட அளவீட்டு, தொதிகள், நேரோட்ட/ ஆடலோட்ட வழங்கல் தொகுதி, மின்பிறப்பாக்கி தடக்கு, மற்றும் உலோக உறையிடப்பட்ட ஆளிமாற்றி.

(vii) தொலைத்தொடர்பு உபகரணங்கள் :
ஒளியியல் நார் மற்றும் நுண்ணலை தொலைத்தொர்பு தொகுதி, வெள்ள முன்னறிவிப்பு, மற்றும் அபாய சமிக்ஞைகள், ஆலோசனை மற்றும் கட்டுப்பாட்டுத்தொகுதி.

(viii) கொத்மலை ஆளித்தளத்தை விரிவாக்கல் :
நிலத்தை தயார்ப்படுத்தலுடன் கூடிய சிவில் வேலைகள், அடித்தள வேலை, 220 கி.வோ. பேருந்து கம்பிகள் தற்போதுள்ள ஆளித்தளத்திலிருந்து விரிவாக்கப்பட்ட ஆளிமாற்றிக்கு விஸ்தரித்தல், 220 கி.வோ பாரம்பரிய ஆளிமாற்றி, கட்டுப்பாடு, மற்றும் புதிய தளங்களின் பாதுகாப்பு தொகுதி.

(x) நுவரெலியா வலையமைப்பு நிலைய விரிவாக்கம் :
அடித்தள வேலை, 33 கி.வோ. ஊர்திகளை தற்போதுள்ள தளங்களிலிருந்து விஸ்தரித்தல், 33 கி. வோ. பாரம்பரிய ஆளிமாற்றி, கட்டுப்பாடு, மற்றும் புதிய தளங்களின் பாதுகாப்பு தொகுதி.

(ஆ) பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை : மூன்று (3)

(இ) வெற்றிகரமான கேள்விப்பத்திரதாரரின் பெயர் : மிட்சுபிசி கோப்பரேசன், ஜப்பான்.

(ஈ) ஒப்பந்த வேலை வழங்கப்பட்ட தொகை : 7,972,548,380 ஜப்பானிய யென் மற்றும் 585,022,787 இலங்கை ரூபா.

10-559

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## ருஹுணு அபிவிருத்தி வங்கி – தல்கஸ்வில கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க என்ற வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 வது அதிகாரத்தின் கீழ் ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானமாகும்.*

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதிக்குரிய விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்ட அதிகாரத்தின்படி, 2008.08.28 ஆந் திகதி நடாத்தப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை கூட்டத்திலே கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

"ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பிரசித்திபெற்ற சட்டத்தரணியும், பகிரங்க நொதாரிஸ் திரு. கே. ஜே. டீ. எல். நந்தன அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.12.13 ஆந் திகதியின் இல. 4867 ஈட்டுப்பத்திரத்தின் கீழ் அறவிடவேண்டிய

பணம் செலுத்தல் காலி, நாகொட, 'ஹில்ஹவுஸ்' முகவரியில் வசிக்கும் ஹேவா ருப்பகே கமல் பத்மசிரி என்போர்களினால் செலுத்தாது விடப்பட்டதாகவும், அவ் ஈட்டுப் பத்திரத்தின் கீழ் ரூபா மூன்று இலட்சத்து எண்பத்து ஓராயிரத்து நானூறு (ரூ. 381,400) பணம் றுஹுன அபிவிருத்தி வங்கிக்கு செலுத்த வேண்டியிருப்பதாகவும், 2008.06.23 ஆந் வருடத்திற்கு 23 வீத படி வட்டியுடன் ரூபா மூன்று இலட்சத்து எண்பத்துஓராயிரத்து நானூறு (ரூ. 381,400) க்கான பணம் ஏலவிற்பனை திகதியிலிருந்து வட்டியும் சேர்த்து ஏலவிற்பனை செலவும் இருப்பின் அவற்றை குறைத்துக் கொண்டும், அவற்றை அறவிட்டுக் கொள்ளும் பொருட்டு இலக்கம் 4867 இன் கீழ் அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான திரு. ஜீ. பீ. ஆனன்த என்பவர்களினால் வங்கிக்கு அறவிடவேண்டிய பணம், ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனையவற்றுடன் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபை இதில் தீர்மானித்துள்ளது".

### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திலே கங்கபட பத்துவயில் நாகொடயில் அமைந்துள்ள இல. 61 என்ற அல்லது கிதுலன்கன்த குலன என்ற வடக்கு : இல. 61 டப்ளிவ் என்ற கிதுலன் துண்டும், கிழக்கு : - இல. 61 என்ற துண்டும் ; தெற்கு: இல. 61 எனும் காணியும் மேற்கு: இல. 278 உம், 282 என்ற காணியும் ; எல்லையாகக் கொண்ட ஒரு ஏக்கர் ஒரு றூட் , இருபது பேர்ச்சஸ் (1ஏ. 1 ரூ. 20பே.) கொண்ட மிகப் பெரிய காணியும் அத்துடன் அணைத்து பயிர்செய்கை போன்றனவும் கட்டிடங்களும் உள்ளடங்கலாக.

இக் காணி சொத்துக்கள் கே/81/18 சங் 50/256 கீழ் 2006.03.18 ஆந் திகதியின் காலி காணிப் பதிவு அலுவலகத்திலே பதியப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபை ஆணைப்படி,

அமரசேன பிரதாபசிங்ஹ,
பொது முகாமையாளர்.

றுஹுன அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம்,
பம்புரண, மாத்தறை.

10-498/1

---

### றுஹுன அபிவிருத்தி வங்கி – மாத்தறை நகர சபை

1990 ஆம் ஆண்டின் 4 இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 வது அதிகாரத்தின் கீழ் றுஹுன அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானமாகும்.

1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கியின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதி வர்த்தமானி விஷேட அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட றுஹுன அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்ட அதிகாரத்தின்படி, 2008.08.28 ஆந் திகதி நடாத்தப்பட்ட றுஹுன அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர் சபை கூட்டத்திலே கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

றுஹுன அபிவிருத்தி வங்கியின் பிரசித்திபெற்ற சட்டத்தரணியும், பகிரங்க நொதாரிசுமான திருமதி சரோஜினி என்பவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.10.19 ஆந் திகதிக்குரிய இல. 3724 ஈட்டுப்பத்திரத்தின் கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்தல் மாத்தறை, பரமுல்ல ஹிந்தமுலகே வத்தயில் இல. 74/2, முகவரியில் வசிக்கும் நம்புகாரவசம் கொடுதுர ஆரச்சிகே பிரசன்ன கடபொடி கங்காணம்கே கமலாவதி ஆகியோர்களினால் செலுத்தாது விடப்பட்டதாகவும், அவ் ஈட்டுப் பத்திரத்தின் கீழ் ரூபா இரண்டு இலட்சத்து இரண்டாயிரத்து ஐநூறு (ரூ. 2,02,500) க்கான பணம் றுஹுன அபிவிருத்தி வங்கிக்கு செலுத்த வேண்டியிருப்பதாகவும், 2006.12.30 ஆந் திகதியிலிருந்து வருடத்திற்கு 20% படி ரூபா இரண்டு இலட்சத்து இரண்டாயிரத்து ஐநூறு (ரூ. 202,500) க்காக ஏலவிற்பனை செலவும் திகதியிலிருந்து வருடத்திற்கான வட்டியுடன் சேர்த்து வேறு ஏதாவதொரு செலவுகள் செய்திருப்பின் அவற்றை குறைத்துக்கொண்டு அவற்றை அறவிட்டுக் கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனை யாளரான திரு. ஜீ. பீ. ஆனந்த என்பவர்களினால் இல. 3724 க்கு கீழ் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களும் ஏனையவற்றுடன் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானித்துள்ளது."

### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே மாத்தறை கடவத் சதரைக்குள் மாத்தறை நகர சபை எல்லைக்குள் பரமுல்ல பாதையில் வருமானவரி இல. 74 என்ற லிந்தமுல்லவத்த என்ற காணிக்கு மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தின் பி. 10340 எனும் வழக்கின் நிரந்தரமாக்கப்பட்ட பீ. எம். எரன் விஜேவீரஅவர்களின் இல. 2382/1984.05.01 ஆந் திகதியின் வரைபடத்தின் வேறாக்கப்பட்ட இல. 03 என்ற துண்டும் ; வடக்கு : தெனேகேவத்த வேராக்கிய பாதையும் ; கிழக்கு: இக்காணியின் இல. 04 என்ற துண்டும் தெற்கு : இக் காணியின் இல. 02 என்ற துண்டும், மேற்கு: இக் காணியின் 02 என்ற துண்டும், எல்லையாக ஐந்து தசம் ஒன்று மூன்றுபேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 5.13 பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அங்குள்ள அணைத்தும் அடங்கலாக.

இக் காணி இல. 311/205 இன் கீழ் 2004.10.19 ஆந் திகதியில் மாத்தறை காணிப் பதிவு அலுவலகத்திலே பதியப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபை ஆணைப்படி,

அமரசேன பிரதாபசிங்ஹ,
பொதுமுகாமையாளர்.

றுஹுன அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம்,
பம்புரண, மாத்தறை.

10-498/2

---

### கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சீ.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சீ. (பதிவு இலக்கம் பிக்யு 116) பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 243437 - மிகுந்துகுலசூரிய ஜுவான் வர்ணகே பிரியன் பெர்னாண்டோ மற்றும் மாவிஜயமுனி சரணி சவண்திகா சில்வா

கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2008.07.10 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்

றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:-

"கடன் எடுத்த மிகுந்துகுலசூரிய ஜுவான் வர்ணகே பிரியன் பெர்னாண்டோ மற்றும் மாவிஜயமுனி சரணி சவண்திகா சில்வா என்பவர்கள் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பிஎல்சி சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கெ. என். பி. பெரேராவின் 2005.06.15 ஆந் திகதியுடைய முறிவு இலக்கம் 375 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறிவு மூலம் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சீ. க்கு 2008.05.05 ஆந் திகதி வரை ரூபா 20,38,335.84 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் அதற்கான தத்துவங்களின் கீழ் சொல்லப்பட்ட முறிவு இலக்கம் 375 மூலம் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி. க்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் அதில் அமைந்துள்ள எல்லாமும் சேர்த்து சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 20,38,335.84 பணத்தொகையுடன் 2008.05.06 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை ரூபா 14,74,588.77 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக, கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99 இல் உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக் கப்பட்டுள்ளது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ராகம் பத்து அலுத்குரு கோறளையில் ஜா-எல பிரதேச சபை எல்லைக்குள் ராகம கிராமத்தில் அமைந்துள்ள கட்டிடங்கள், இலக்கங்கள், பட்டகம வீதி, இலக்கம் 199/ 3மற்றும் 199/ 1 என்ற நிலஅளவையாளர் சி. செனவிரத்தனவின் 2003.01.07 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1447 இல் காண்பிக்கப்பட்ட தெல்காவத்த என்ற காணியின் லொட் 3. இக்காணியின் எல்லைகள் - வடக்கு : கான்தி பெர்னாண்டோ, அன்டரசன் பெர்னாண்டோ, ரோயான் பெர்னாந்து மற்றும் கேர்டி சில்வாவின் காணி ; கிழக்கு : அரிசன் பெர்னாண்டோவின் காணி ; தெற்கு : சந்தலால் பெர்னாந்து, அந்தோனி ருக்சான் , தம்பிதுரை மற்றும் ஸ்டான்லி சில்வாவின் காணித்துண்டு ; மேற்கு: லொட் 2. இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 36.47பே. மேற்படி வரைபடம் இலக்கம் 1447. இக்காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் B 583/31 இல் பதிவு செய்யப்பட்டது.

இக்காணியூடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடன் மேற்படி சொல்லப்பட்ட வரைபடம் இலக்கம் 1447 இல் காண்பிக்கப்பட்ட தெல்காவத்த என்ற காணியின் லொட் 1 (20 அடி பாதை) இக்காணியின் எல்லைகள் - வடக்கு : டேவிட் பெரேரா, சியாரி சில்வா மற்றும் கான்தி பெரேரா உரிமையாளர்களின் காணி ; கிழக்கு : லொட் 3 ; தெற்கு : லொட் 2 ; மேற்கு : பட்டகம வீதி. இக்காணியின் விஸ்திருணம் (ஏ. 0றூ. 8.01பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 1447 இக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் B 583/32 இல் பதிவு செய்யப்பட்டது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

10-542

## இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிற்றெற்றின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"குருநாகலையைச் சேர்ந்த நவீந்திர கலப்பத்தி என்பவர், இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிற்றெற் சார்பில் குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ரீ. எஸ். ஐ. வெத்தேவ என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இரண்டும் 2007, யூலை 12 ஆந் திகதிய 4159 ஆம், 4160 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறிகள் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளராதலாலும் 2008, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்றுள்ள வாறாக எட்டு இலட்சத்து தொண்ணூற்றையாயிரத்து எண்ணூற்றுதொண்ணூறு ரூபா தொண்ணூற்றுமூன்று சதம் (ரூ. 8,95,890.93) கொண்ட தொகையும் 2008, மே 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை சொல்லப்பட்ட முறிகள் மீது ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு வீத (36%) வட்டியும் அல்லது வசதிக்கு ஏற்புடையற்பாலதான வேறேதேனும் வீதத்திலான வட்டியும் சொல்லப்பட்ட நவீந்திர கலப்பத்தி என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிற்றெற்றுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாத லாலும், இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிற்றெற்றின் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிற்றெற்றினால் உறப்பட்ட சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும், அவற்றின் மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து எட்டு இலட்சத்து தொண்ணூற்றையாயிரத்து எண்ணூற்றுதொண்ணூறு ரூபா தொண்ணூற்றுமூன்று சதம் (ரூ. 8,95,890.93) கொண்ட தொகையை 2008, மே 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை அதன் மீது ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு வீத (36%) வட்டியுடன் அல்லது வசதிக்கு ஏற்புடையற்பாலதான வேறேதேனும் வீத வட்டியுடன் அறவிடுவதற்காக 4159 ஆம், 4160 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிற்றெற்றுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**4159 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள வியூடவில்லி ஹத்தபத்துவின் திரகன்தஹய கோறளையில் குருநாகல் மாநகரசபை எல்லைகளினுள் வெலன்கொல்ல கிராமத்தில் அமைந்துள்ளதும், வெலன்கொல்லத் தோட்டம் என அழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜீ. ரணசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003, யூன் 25 ஆந் திகதிய 1625/ஏ ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 105 என அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; காணித்துண்டம் 105 என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டு. சொல்லப்பட்ட வரைபடத்தின்படி பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் 104 மற்றும் 102 ; கிழக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் 101 மற்றும் 106 ; தெற்கில் : காணித்துண்டம் 106 மற்றும் 30 அடி அகலமான வீதி வழி ; மற்றும் மேற்கில் : 30 அடி அகலமான வீதியாகவுள்ள காணித்துண்டம் 110, பரப்பளவில் இது, அதன் மீதுள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் பத்து தசம் ஆறு ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 10.65பே.) கொண்டுள்ளது. 1525 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 04 என அடையாளமிடப்பட்ட வீதி வழிகளையும், 1625ஏ ஆம் இலக்க வரை படத்திலுள்ள காணித்துண்டுகள் 110, 111, 112, 113 மற்றும் 114 என்பவற்றையும் பொதுவாகப் பயன்படுத்துவதற்கும் பேணுவதற்குமான உரிமையுடன் சேர்த்து.

**4160 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள தேவமெதி ஹத்பத்துவின் தேவமெதி உடுகஹாக் கோறளையில் தம்பதேனி ஹத்பத்து மற்றும் மொரகொல்லக் கிராமத்திலுள்ள ரெக்கோபத்து கோறளையின் உஹுமீயா மற்றும் பாம்பே கிராமங்களில் அமைந்துள்ளதும், குளோவிஸ் தோட்டம் என அழைக்கப்படும் காணியினதாய் காணித்துண்டம் 01 என அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; காணித்துண்டம் 01 என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டு உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். கே. தென்னகெதர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007, மாச்சு 23 ஆந் திகதிய 1208ஏ/07 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்படுவதுடன், சொல்லப்பட்ட வரைபடத்தின்படி பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கில் : கிராமங்களின் நெல் வயல்களும் எலவும், கிரிபண்டாவின் நெல் வயலும் ; கிழக்கில் : டாக்டர் பெரேராவினால் உரிமைகோரப்பட்ட குளோவிஸ் தோட்டத்தின் ஒரு பாகமும், நீர்கொழும்பு வீதிக்கு இட்டுக்குச் செல்லுகின்ற 20 அடி அகலமான வீதி வழியும் ; தெற்கில் : உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஆர். பீ. மொரகன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 541 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள (641 எனப் பிழையாக கூறப்பட்டுள்ளது) காணித்துண்டம் 01, உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. குணதிலக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2754 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 03, எல மற்றும் கிராமங்களுக்குப் பராதீனப்படுத்தப்பட்ட நெல் வயல்கள் ; மற்றும் மேற்கில் : மொறகொல்லவத்த ; பரப்பளவில் இது, அதன் மீதுள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும், நீர்கொழும்புக்கு இட்டுச்செல்கின்ற சொல்லப்பட்ட காணியின் அருகிலுள்ள 20 அடி அகலமான வீதி வழியைப் பொதுவாகப் பயன்படுத்துவதற்கும் பேணுவதற்குமான உரிமையுடனும், பத்து ஏக்கர் இரண்டு றூட் எட்டு தசம் மூன்று பேர்ச்சுக்களை (10ஏ. 2றூ. 8.3பே.) கொண்டுள்ளது.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/
பிரதான நிறைவேற்று அலுவலர்.

இ. அ. நி.கூ. வர்த்தன வங்கி லிமிற்றெற்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை
கொழும்பு 2.

10-561/1

---

**இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை நீர்கொழும்பில் கொண்டுள்ளதுமான நிபுன் ட்ரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம். இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட் சார்பில் கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். ஏ. என். டபிள்யூ. ராஜகருண என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.03.06 ஆந் தேதிய 24767 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவு களைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும், 2008, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக சொல்லப்பட்ட முறிமீது இருபத்துமூன்று இலட்சத்து எட்டாயிரத்து நானூற்றி யிருபத்திரெண்டு ரூபா பதினான்கு சதம் (ரூ. 23,08,422.14) கொண்ட தொகையும் 2008, மே 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு சதவீத (36%) வட்டியும் அல்லது வசதிக்கேற்புடையற்பாலதான வேறேதேனும் வீதவட்டியும் சொல்லப்பட்ட நிபுன் ட்ரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்திடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட கீழே விவரிக்கப்படும், சொல்லப்பட்ட காணியையும், வளவுகளையும், அதன்மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து இருபத்து மூன்று இலட்சத்து எட்டாயிரத்து

நானூற்றி யிருபத்திரெண்டு ரூபா பதினான்கு சதம் (ரூ. 23,08,422.14) கொண்ட தொகையை 2008, மே 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு சதவீத (36%) வட்டியும் அல்லது வசதிற்கேற்புடையற்பாலதான வேறேதேனும் வீதவட்டியுடன் அறவிடுவதற்காக 24767 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டு மூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள வேறேல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 24767 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்திலுள்ள அளுத்குரு கோறளையின் தூனகஹாப்பத்துவில், திம்பிரிகஸ்கட்டுவ வீதியில் 208 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், நீர்கொழும்பின் மாநகர சபை எல்லைகளினுள் வெலி ஹேனவில் அமைந்துள்ளதும், 'தளுபொத குருந்துவத்த' எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டீ. பீ. விமலசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1999.06.17 ஆந் தேதிய 3397 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1, பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : திம்பிரிகஸ்கட்டுவ வீதி; கிழக்கில் : 3257 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 ; தெற்கில் : 3257 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 4 மற்றும் மேற்கில் : ஆரியரத்ன ஜயசிங்கவின் காணி ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும் மரங்களுடனும் பயிர்களுடனும் வேறெல்லாவற்றுடனும் இருபது தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 20.20பே.) கொண்டுள்ளது.

2. மேற்கூறப்பட்ட திம்பிரிகஸ்கட்டுவ வீதியில் 210 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், நீர்கொழும்பின் மாநகர சபை எல்லைகளினுள் வெலி ஹேனவில் அமைந்துள்ளதும், தளுபொத குருந்துவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டீ. பீ. விமலசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003.02.09 ஆந் தேதிய 4486 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1, பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : திம்பிரிகஸ்கட்டுவ வீதி; கிழக்கில் : 3257 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 ; தெற்கில் : 3257 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 4 மற்றும் மேற்கில் : 3397 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1 ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும் மரங்களுடனும் பயிர்களுடனும் வேறெல்லாவற்றுடனும் பன்னிரெண்டு தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 12.90பே.) கொண்டுள்ளது.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி.கூ. வர்த்தன வங்கி,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

10-561/2

## இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், நுகேகொடையில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை கொண்டுள்ளதுமான வெஸ்ட் சைக்ளோன் அட்வடைசிங் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம். இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஜ. கருணானந்த என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.07.20 ஆந் தேதிய 43 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறி மீதும் 2004.10.19 ஆந் தேதிய 60 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும், சொல்லப்பட்ட ஈட்டுமுறியின்மீது 2008, மே 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒன்பது இலட்சத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றிமூன்று ரூபா எழுபத்திமூன்று சதம் (ரூ. 9,00,993.73) கொண்ட தொகையும் 2008, யூன் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு சதவீத (36%) வட்டியும் அல்லது வசதிக்கேற்புடையற்பாலதான வேறேதேனும் வீதவட்டியும் பதினேழு இலட்சத்துத் தொண்ணூற்றாறாயிரத்து எழுநூற்றியெண்பத்தொரு ருபா எழுபத்தெட்டுச் சதம் (ரூ. 17,96,781.78) கொண்ட தொகையும் 2008, யூன் 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை இரண்டு இலட்சத்து ஐயாயிரத்து இருநூற்றித்தொண்ணூற்றாறு ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 2,05,296.71) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தொரு வீத (21%) வட்டியும் அத்துடன் இரண்டு இலட்சத்துத் தொண்ணூறாயிரத்து இருநூற்றியைந்து ரூபா முப்பத்தெட்டுச் சதம் (ரூ. 2,90,205.38) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்திரெண்டு வீத (22%) வட்டியும் பத்து இலட்சம் ரூபா (ரூ. 10,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தைந்து வீத (25%) வட்டியும் சொல்லப்பட்ட வெஸ்ட் சைக்ளோன் அட்வடைசிங் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்திடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, சொல்லப்பட்ட காணியையும், வளவுகளையும், அதன்மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஒன்பது இலட்சத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றிமூன்று ரூபா எழுபத்திமூன்று சதம் (ரூ. 9,00,993.73) கொண்ட தொகையை அதன் மீது

ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு சதவீத (36%) வட்டியும் அல்லது வசதிக்கேற்புடையற்பாலதான வேறேதேனு வீதவட்டியும் பதினேழு இலட்சத்துத் தொண்ணூற்றாறாயிரத்து எழுநூற்றியெண்பத்தொரு ரூபா எழுபத்தெட்டுச் சதம் (ரூ. 17,96,781.78) கொண்ட தொகையும் 2008, யூன் 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை இரண்டு இலட்சத்து ஐயாயிரத்து இருநூற்றித்தொண்ணூற்றாறு ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 2,05,296.71) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தொரு வீத (21%) வட்டியும் அத்துடன் இரண்டு இலட்சத்துத் தொண்ணூறாயிரத்து இருநூற்றியைந்து ரூபா முப்பத்தெட்டுச் சதம் (ரூ. 2,90,205.38) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்திரெண்டு வீத (22%) வட்டியும் பத்து இலட்சம் ரூபா (ரூ. 10,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தைந்து வீத (25%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடவதற்காக 43 ஆம், 60 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள எல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**43 ஆம், 60 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டி கோறளையின் பள்ளே பத்தவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் நிருவாக எல்லைகளினுள் கங்கொடவிலவில் சந்தானம்பிட்டிய மாவத்தையிலிருந்து செல்லும் ஒரு வீதி நெடுகிலும் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும் பயிர்களுடனும் மற்றெல்லாவற்றுடனும் பலங்கஹாவத்த எனவழைக்கப்படம் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. செல்வரட்ணம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001.11.19 ஆந் தேதிய 9625 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதும், காணித்துண்டம் ஈ என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் ஈ பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது :- வடக்கில் இதன் காணித்துண்டம் டீ ; கிழக்கில் : காணித்துண்டம் எச் (3.05 மீற்றர் (10அடி) அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்) ; தெற்கில் : காணித்துண்டம் எச் (3.05 மீற்றர் (10அடி) அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்) மற்றும் மேற்கில் : சொல்லப்பட்ட 3533 ஆம் இலக்க வரைபடத்தில் இரண்டும் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் 10 மற்றும் காணித்துண்டம் 9 ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 9625 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஆறு தசம் ஐந்து ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 6.55பே.) கொண்டுமுள்ளது.

சொல்லப்பட்ட 9625 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் எச் என்பதிலும் அதன்மீதும் அதுநெடுகிலும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எச். தேவசுரேந்திர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2002.02.14 ஆந் தேதிய 706 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் இல. 9 இலும் அதன்மீதும் அதுநெடுகிலும் ஆன பாதையுரிமையுடனும் சேர்த்து.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

10-561/3

**மக்கள் வங்கி – சிலாபம் கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் பிரேரணை*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி பிரிவின்கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2007.12.17 ஆந் திகதி கீழே தரப்பட்டிருக்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறியத்தருகிறேன்.

''மாறவிலை பிரசித்த நொத்தாரிசு திருமதி ருவிணி ஏ. எஸ். தஸநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.03.03 ஆந் திகதியும் 2470ஆம் இலக்கத்தையும் அதே வழக்கறிஞரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.04.06 ஆந் திகதியும் 4009ஆம் இலக்கத்தையுமுடைய அடைவுச்சீட்டுகளின் பிரகாரம் கொடுப்பனவு, போருதொட்டகே திலீப் அகில ஜீவன்த பெரேரா என்பவர் கடப்பாடுடையவராகக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியிருப்பதால், குறிப்பிட்ட 2470 ஆம் இலக்க அவ்வடைவு சீட்டின் கீழ் தற்போது நான்கு இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்து எண்ணூற்றி எழுபத்தி நான்கு ரூபா எண்பத்தி நான்கு சதம் (ரூ. 4,43,874.84), மக்கள் வங்கிக்கு அறவிடப்பட வேண்டியுள்ளதால், மேலும் நான்கு இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்து எண்ணூற்றி எழுபத்தி நான்கு ரூபா எண்பத்தி நான்கு சதத்துக்கும் (ரூ. 4,43,874.84), 2007.03.05 ஆந் திகதி முதல் வருடத்துக்கு 15.75 வீதம், ஏலவிற்பனை தினம் வரை மேலும் வட்டியுடன், சக தொடர்புடைய மக்கள் வங்கி சட்டத்தின் 29 எல் சரத்தின்படி அறவிடப்பட வேண்டிய பணம் சக கட்டணம் உட்பட ஏதாவது கட்டணம் கிடைத்திருப்பின், அவைகள் குறைக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட நான்கு இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்து எண்ணூற்றி எழுபத்தி நான்கு ரூபா எண்பத்தி நான்கு சதத்தையும் (ரூ. 4,43,874.84), சக 4009 ஆம் இலக்க அடைவு சீட்டின் கீழ் ரூபாய் ஐந்து இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எழுணூற்றி எட்டு ரூபா இரண்டு சதம் (ரூ. 5,19,708.02), அறவிடப்பட வேண்டியுள்ளதால், 2007.05.11 ஆம் திகதி முதல் வருடத்திற்கு 16.75 வீதம் ஏலவிற்பனை தினம் வரை மேலும் வட்டியுடன், சக தொடர்புடைய மக்கள் வங்கி சட்டத்தின் 29 எல் சரத்தின்படி அறவிடப்பட வேண்டிய பணம் சக கட்டணம் உட்பட ஏதாவது கட்டணம் கிடைத்திருப்பின், அவைகள் குறைக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட நான்கு இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்து எண்ணூற்றி எழுபத்தி நான்கு ரூபா எண்பத்தி நான்கு சதத்தையும் (ரூ. 4,43,874.84), ரூபாய் ஐந்து இலட்சத்தி பத்தொன்பதாயிரத்து எழுணூற்றி எட்டு ரூபா இரண்டு சதத்தையும் (ரூ. 5,19,708.02), மீட்டெடுப்பதற்காக நீர்கொழும்பு அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர் திரு. டப். பீ. ஸீ. பெரேரா என்பவரால் 2470ஆம் சக 4009 ஆம் இலக்க அடைவுச்சீட்டுகளின் பிரகாரம் இவ்வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ள சொத்தையும் வீட்டையும் பொது ஏல விற்பனையில் விற்கப்படவேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க ச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கத்தின் கீழ் மக்கள் வங்கி சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் வழங்கியுள்ள அதிகாரங்களுக்கிணங்க மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானித்துள்ளது.

**ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விபரம்**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், சிலாபம் காணிப்பதிவு பிரிவிற்குரிய, வட பிட்டிகல் கோரளையில், ஆனவிழுந்தான் பத்துவில், ஆனவிழுந்தாவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள. ''ஆனவிழுந்தான் வத்த'' எனும் பெயருடைய காணிக்கு

திரு. ஜே. ஏ. வீ. ராஜநாயகம், அதிகாரம்பெற்ற நில அளவையாளரினால் 2005.01.13 ஆந் திகதி திகதியன்று அளந்து தயாரிக்கப்பட்ட ஜே/1434ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க 'ஏ' இலக்கத் தொகுதிக்கு எல்லைகள் - வடக்கில்: பீபீபு. 2667 ஆம் இலக்க வரைபடத்தில் 4 ஆம் சக 6 ஆம் இலக்கத் தொகுதிகள்; கிழக்கில்; பீபீபு. 2667 ஆம் இலக்க வரைபடத்தில் 10 ஆம் இலக்கத்தொகுதி; தெற்கில்; பீபீபு. 2667 ஆம் இலக்க வரைபடத்தில் 15 ஆம் இலக்கத்தொகுதி; மேற்கில்: மேற்சொன்ன வரைபடத்தில் 04 ஆம் இலக்கத் தொகுதி ஆகிய எல்லைகளுக்குள்ளே அமைந்துள்ள பூச்சியம் ஏக்கர் பூஜ்யம் றூட். பதினெட்டு தசம் ஐந்து பர்ச்சஸ் (0ஏ. 0றூ. 18.5பே.) அல்லது ஹெக்டயார் பூஜ்யம் தசம் பூஜ்யம் நான்கு ஆறு ஒன்பது (ஹெக். 0.0469) விஸ்தீரணமுள்ள காணியும், அத்துடன் மண்ணோடு சேர்த்து மரங்கள், பயிர்கள், கட்டிடங்களும். மேலும் அக்காணியில் இருக்கும் அனைத்தும் அடங்கும்.

இக்காணி சிலாபம் காணி பதிவு அலுவலகத்தில் D 161/128 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் உத்தரவுப்படி,

பிரதேச முகாமையாளர்,
சிலாபம்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 79, மாறவில பாதை,
நாத்தாண்டிய.

10-638

---

## இ. அ. நி. கூ. வர்தன வங்கி

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கொப்பேகணவைச் சேர்ந்த விக்ரம ஆராச்சிகே இந்திரா துஷாரமாலி குணதிலக்க என்பவர் , இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட் சார்பில் குளியாபிட்டியவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். என். சீ. ஜயக்கொடி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.05.28 ஆந் தேதிய 423 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராத லாலும், 2008, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒன்பது இலட்சத்து எண்பத்தாறாயிரத்து இருநூற்றியெண்பத்தொன்பது ரூபா அறுபத்திரெண்டு சதம் (ரூ. 9,86,289.62) கொண்ட தொகையும் 2008, மே 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒன்பது இலட்சத்துப் பதினான்காயிரத்து அறுநூற்றி நாற்பத்தெட்டு ரூபா இரண்டு சதம் (ரூ. 9,14,648.02) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தாறு தசம் மூன்று எட்டு சதவீத (26.38%) வட்டியும் சொல்லப்பட்ட விக்கிரம ஆராச்சிகே இந்திரா துசாரமாலி குணதிலக என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அவர்களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, சொல்லப்பட்ட காணியையும், வளவுகளையும், அதன்மீதுள்ள வெறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஒன்பது இலட்சத்து எண்பத்தாறாயிரத்து இருநூற்றியெண்பத்தொன்பது ரூபா அறுபத்திரெண்டு சதம் (ரூ. 9,86,289.62) கொண்ட தொகையும் 2008, மே 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒன்பது இலட்சத்துப் பதினான்காயிரத்து அறுநூற்றி நாற்பத்தெட்டு ரூபா இரண்டு சதம் (ரூ. 9,14,648.02) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தாறு தசம் மூன்று எட்டு சதவீத (26.38%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 423 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள எல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷோக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

#### 423 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள போலதொர கோறளை தேவமெதி ஹத்பத்தவில் ஹிங்கொல்லக் கிராமத்தில் அமைந்துள்ளதும், கொஸ்கஹாமுலவத்த மறுபெயர் அம்பகஹாமுலவத்த மறுபெயர் பெலெட்டிவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். திசாநாயக்கா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1997.04.21 ஆந் தேதிய 4736 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 3 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக் காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 3, 4736 ஆம் இலக்க வரைபடத்தின்படி, பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது:- வடக்கில் : கெத் எல ; கிழக்கில் : சொல்லப்பட்ட 4736 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 ; தெற்கில் : ஆர். எம். குணபண்டாவின் காணியும் கோபேகன பெருவழிக்கான வீதியும் மற்றும் மேற்கில் : சொல்லப்பட்ட 4736 ஆம் லஇக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 4 ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ளவையும் அதனோடிணைந்துள்ளவையுமான மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் ஒரு றூட் இருபத்தேழு தசம் ஆறு பேர்ச்சுக்களை (0ஏ. 1றூ. 27.6பே.) கொண்டுள்ளது.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி.கூ. வர்த்தன வங்கி,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

10-561/5

## இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''பன்னிப்பிட்டியாவில் 'டீ. ஐ. ஏ. எஸ். அமரசேக்கர டிஸ்ரிபியூட்டர்ஸ்' என்ற பெயர் மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் தொழில் கொண்டு நடாத்துகின்ற, இருவரும் பன்னிப்பிட்டியாவைச் சேர்ந்த டொன் இந்திக்க அசேல சூரியாராச்சி அமரசேக்கர மற்றும் டொன் சுசந்த சூரியாராச்சி அமரசேக்கர மறுபெயர் சோமபால மற்றும் கருணாராச்சிகே பாலித்த சமன் குமார என்போர், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஐ. கருணானந்த என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இரண்டும் 2006.08.14 ஆந் தேதிய 253 ஆம், 254 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறிகள் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும், சொல்லப்பட்ட முறிகள்மீது 2008, மே 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒரு கோடி ஆறு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தைந்து ரூபா முப்பத்திநான்கு சதம் (ரூ. 1,06,28,955.34) கொண்ட தொகையும் 2008, யூன் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு சதவீத (36%) வட்டியும் அல்லது வசதிக்கேற்புடையற்பாலதான வேறேதேனும் வீதவட்டியும் அறுபது இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து நானூற்றிமுப்பத்திநான்கு ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 60,28,434.21) கொண்ட தொகையும் 2008, யூன் 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை இருபத்து எட்டு இலட்சத்துப் பதினையாயிரத்து எழுநூற்றிருபது ரூபா தொண்ணூற்றிரெண்டு சதம் (ரூ. 28,15,720.92) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தாறு வீத (26%) வட்டியும் அத்துடன் இருபத்தைந்து இலட்சம் (ரூ. 25,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தெட்டு வீத (28%) வட்டியும் சொல்லப்பட்ட டொன் இந்திக்க அசேல சூரியாராச்சி அமரசேக்கர மற்றும் டொன் சுசந்த சூரியாராச்சி அமரசேக்கர மறுபெயர் சோமபால மற்றும் கருணாராச்சிகே பாலித்த சமன் குமார என்போரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இல்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, சொல்லப்பட்ட காணியையும், வளவுகளையும், அதன்மீதுள்ள மற்றெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து சொல்லப்பட்ட ஒரு கோடி ஆறு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தைந்து ரூபா முப்பத்திநான்கு சதம் (ரூ. 1,06,28,955.34) கொண்ட தொகையும் 2008, யூன் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு சதவீத (36%) வட்டியும் அல்லது வசதிக்கேற்புடையற்பாலதான வேறேதேனும் வீதவட்டியும் அறுபது இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து நானூற்றிமுப்பத்திநான்கு ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 60,28,434.21) கொண்ட தொகையும் 2008, யூன் 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை இருபத்தியெட்டு இலட்சத்துப் பதினையாயிரத்து எழுநூற்றிருபது ரூபா தொண்ணூற்றிரெண்டு சதம் (ரூ. 28,15,720.92) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தாறு வீத (26%) வட்டியும் அத்துடன் இருபத்தைந்து இலட்சம் (ரூ. 25,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தெட்டு வீத (28%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 253 ஆம், 254 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள மற்றெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 253 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டி கோறளையின் பள்ளே பத்துவில் மகரகமையின் நகர சபை எல்லைகளினுள் பன்னிப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ளதும், தெல்கஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெறற நிலஅளவையாளரும் மட்டப்படுத்துநருமான எச். ஏ. டீ. பிரேமரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2002.10.09 ஆந் தேதிய 2701ஏ ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் X1பீ என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் X1பீ, பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது:- வடக்கில் : பழைய கொட்டாவ வீதியிலுள்ள 298 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் ; கிழக்கில் : டீ. டீ. பீ. ரணசிங்கவினால் உரிமைகோரப்பட்ட காணித்துண்டம் 2 ; தெற்கில் : ஹைலெவல் வீதி மற்றும் மேற்கில் : 2701 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் X2 மற்றும் X1ஏ ; பரப்பளவில் இது, பதினான்கு தசம் மூன்று ஏழு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 14.37பே.) கொண்டுள்ளது.

### 254 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டி கோறளையின் பள்ளே பத்துவில் மகரகமையின் நகர சபை எல்லைகளினுள் ஹைலெவல் வீதிலுள்ள 93/ 5 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், தெல்கஹாகணத்த மறுபெயர் வல்ஜம்புகஹாலந்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. பர்னாந்து என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2002.09.28 ஆந் தேதிய 41 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது :- வடக்கில் : காணித்துண்டம் 2 ; கிழக்கில் : காணித்துண்டம் 3 ; தெற்கில் : தெல்கஹாகணத்த மறுபெயர் வல்ஜம்புகஹாலந்த மற்றும் மேற்கில் : வீதி ; பரப்பளவில் இது, பத்துத் தசம் ஐந்து ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 10.55பே.) கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட தெல்கஹாகணத்த மறுபெயர் வல்ஜம்புகஹாலந்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர்

டபிள்யூ. ஏ. பர்னாந்து என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2002.09.28 ஆந் தேதிய 41 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 3 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கில் : ஹைலெவல் வீதியிலுள்ள 93/3 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் ; கிழக்கில் : ஜீ. ஏ. டபிள்யூ. குணதிஸ்ஸவினதும் ஏனையோரினதும் காணி ; தெற்கில் : தெல்கஹாகணத்த மறுபெயர் வல்ஜம்புகஹாலந்த மற்றும் மேற்கில் : காணித்துண்டங்கள் 1 மற்றும் 2 ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 41 ஆம் இலக்க வரைபடத்தின்படி எட்டுத் தசம் ஒன்பது நான்கு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 8.94பே.) அல்லது (0.0226 ஹெக்டேயர்களைக்) கொண்டுள்ளது.

சொல்லப்பட்ட 41 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் இல. 2டி இலும் அதன்மீதும் அதுநெடுகிலும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். டீ. லியனசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1969.12.10 ஆந் தேதிய 207 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டங்கள் இல. X மற்றும் Y என்பவற்றிலும் அவற்றின் மீதும் அவைநெடுகிலுமான பாதையுரிமையுடன் சேர்த்து.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி.கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

10-561/6

---

## மக்கள் வங்கி – ஜா-எல கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 29.08.2008 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எச். எம். எல். புஷ்பகுமாரி அத்தாட்சிப்படுத்திய 26.12.2007 ஆந் திகதிகொண்ட 1344 ஆம் இலக்க முறியின்மீது வருமதியான கொடுப்பனவில் அந்தனி ஜூலியன் பிச்சை தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் மீது எழுபத்தைந்து இலட்சம் ரூபா (ரூபா 75,00,000) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியு முள்ளது. ஆதலால் மேற்படி எழுபத்தைந்து இலட்சம் ரூபாவையும் (ரூபா 75,00,000) எழுபத்தைந்து இலட்சம் ரூபாமீது (ரூபா 75,00,000) 27.12.2007 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 23% சதவீதப்படி மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் மேற்படி மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ஔ (29L) என்னும் பிரிவின் கீழ் அறவிடப்படற்பாலதான பணங்களையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்கான மேற்படி 1344 ஆம் இலக்க முறியினால் மேற்படி வங்கிக்கு ஈடுவைக் கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ஜா-எல உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட ஜா-எல பட்டின சபை எல்லைகளுக்குள் இந்திவிட்டிய 02 ஆம் இலக்கப் பிரிவில் வெலிகம்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ளதும் பூவெல என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் சுபாசிறி லியனகேயால் 02.06.2002 ஆந் திகதி நில அளவை செய்யப்பட்டு பிரிவிடப்பட்ட 224 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 293 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (நில அளவையாளர் நாயகத்தால் சான்றுறுதி செய்யப்பட்ட 20.08.1991 ஆந் திகதிகொண்ட கம். 1638 ஆம் இலக்க வரைபடத்தில் ஒன்றிணைக்கப்பட்டுக் காட்டப்படும் துண்டுகள் 1, 2, 3, 4 என்பவற்றின் மறு நில அளவையும் உட்பிரிவும்) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. இதற்கு எல்லைகளாக வடக்கில் : துண்டு R39/(6.0 மீ. அகலம்) ; கிழக்கில் : துண்டு 282 ; தெற்கில் : துண்டு C ; மேற்கில் : துண்டு R 29 வீதி (4.5 மீ. அகலம்) என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு பதினொன்று தசம் இரண்டு சைவர் பேர்ச்சஸ் (0ஏ.0றூ.11.20பே.). இது கம்பஹா காணிப் பதிவகத்தில் H 63/201 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி 224 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் (வீதிக்கென ஒதுக்கப்பட்ட) காணியின் மீதும் அதன் வழியாகவும் வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 131, கண்டி வீதி,
பெலும்மஹார,
முதுன்கொட.

10-629

---

## மக்கள் வங்கி – மெஜஸ்டிக் சிற்றி

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால்

திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 05.08.2008 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''சந்திரசேகர வாசல முதியான்சேலாகே துஷித பண்டார சந்திரசேகர மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி டப்ளியூ. ஏ. ஆர். எஸ். அபேரத்ன அத்தாட்சிப்படுதிய 22.09.2005 ஆந் திகதிகொண்ட 1636 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது மேற்படி 1636 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது பதினான்கு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து எண்பத்தைந்து ரூபா ஐம்பத்தெட்டு சதம் (ரூபா 14,39,085.58) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் பதினான்கு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து எண்பத்தைந்து ரூபா ஐம்பத்தெட்டு சதத்தையும் (ரூபா 14,39,085.58) பதினான்கு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து எண்பத்தைந்து ரூபா ஐம்பத்தெட்டு சதத்தின்மீது (ரூபா 14,39,085.58) 23.09.2006 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு பதினாறு தசம் ஐந்து (16.5%) சதவீதப்படி மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் வேறு அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 1636 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஏர்வின் பெரேரா என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

01. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, ராகம் பற்று வத்தளை பிரதேச சபையின் ஹெந்தளை உப அலுவலகத்தின் எல்லைகளுக்குட்பட்ட ஹெந்தளை கர்தினால் குரே மாவத்தையில் அமைந்துள்ளதும் ''எண்டருகஹாகும்புற'' என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. டீ. சீ. ஏ. பெரேரா தயாரித்த 02.04.2001 ஆந் திகதிகொண்ட 2124 ஆம் இலக்க வரைபடத்தின்மீது அவரால் செய்யப்பட்ட 16.06.2001 ஆந் திகதிய உட்பிரிவின்படியும் புறக்குறிப்பின்படியும் துண்டு 3 பீ என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. (மேற்படி 2124 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 3 என்பதன் உட்பிரிவொன்று). மேற்படி துண்டு 3 பீ என்பதற்கு எல்லைகளாக – வடக்கில் : துண்டு 2; கிழக்கில் : துண்டு 4 ; தெற்கில் : சிவஞானசுந்தரத்தின் காணி ; மேற்கில் : துண்டு 3 ஏ என்பன அமைந்துள்ளன. மேற்படி 2124 ஆம் இலக்க வரைபடத்தில் செய்யப்பட்ட உட்பிரிவின்படியும் புறக்குறிப்பின்படியும் இதன் பரப்பளவு ஆறு தசம் எட்டு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.6.85பே.).

மேற்படி துண்டு 3 பீ கீழே விவரிக்கப்படும் காணியின் உட்பிரிவொன்றாகும்:-

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, ராகம் பற்று ஹெந்தளை மட்டகொடவில் கர்தினால் குரே மாவத்தையில் தற்பொழுது வத்தளை பிரதேச சபையின் ஹெந்தளை உப அலுவலகத்தின் எல்லைகளுக்குட்பட்ட ஹெந்தளையில் அமைந்துள்ளதும் ''தெஹிகஸ்பில்லாவ'' அல்லது ''எண்டருகஹாகும்புற'' என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டீ. ஜே. வீ. பெரேரா தயாரித்த 20.07.1992 ஆந் திகதிகொண்ட 12729 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 6A என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 6A என்பதற்கு எல்லைகளாக -வடக்கில் : துண்டு 5 ; கிழக்கில் : கர்தினால் குரே மாவத்தை; தெற்கில் : பீ. சீ. டபிள்யூ. ஜயவர்தனவுக்குரிய இதே காணியின் எஞ்சிய பகுதி ; மேற்கில் : துண்டு 3C மற்றும் பீ. சீ. டபிள்யூ. ஜயவர்தனவுக்குரிய காணி என்பன அமைந்துள்ள. மேற்படி 12729 ஆம் இலக்க வரைபடத்தில் செய்யப்பட்ட உட்பிரிவின்படியும் புறக்குறிப்பின்படியும் இதன் பரப்பளவு முப்பத்து மூன்று தசம் ஐந்து சைவர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 33.50பே.) இது கொழும்பு காணிப் பதிவகத்தில் B963/130 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, ராகம் பற்று வத்தளை பிரதேச சபையின் ஹெந்தளை உப அலுவலகத்தின் எல்லைகளுக்குட்பட்ட ஹெந்தளை கர்தினால் குரே மாவத்தையில் அமைந்துள்ளதும் ''எண்டருகஹாகும்புற'' என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. டீ. சீ. ஏ. பெரேரா தயாரித்த 02.04.2001 ஆந் திகதிகொண்ட 12729 ஆம் இலக்க வரைபடத்தில் அவரால் 2001.06.16 ஆந் திகதி செய்யப்பட்ட உட்பிரிவின் படியும் புறக்குறிப்பின் படியும் துண்டு 3A என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும்) (எம். டீ. ஜே. வீ. பெரேரா தயாரித்த 1992.07.20 ஆந் திகதி கொண்ட 12729 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 6A என்பதன் பாகத்தின் உட்பிரிவொன்று) அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 3A என்பதற்கு எல்லைகளாக -வடக்கில் : துண்டு 2 ; கிழக்கில் : துண்டு 3பீ ; தெற்கில் : சிவஞானசுந்தரத்தின் காணி ; மேற்கில் : துண்டு 1 என்பன அமைந்துள்ளன. மேற்படி 2124 ஆம் இலக்க வரைபடத்தில் செய்யப்பட்ட உட்பிரிவின்படியும் புறக்குறிப்பின்படியும் இதன் பரப்பளவு மூன்று தசம் ஐந்து சைவர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 3.50பே.) இது கொழும்பு காணிப் பதிவகத்தில் B 731/ 278 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, ராகம் பற்று வத்தளை பிரதேச சபையின் ஹெந்தளை உப அலுவலகத்தின் எல்லைகளுக்குட்பட்ட ஹெந்தளை மாட்டாகொடையில் கர்தினால் குரே மாவத்தையில் அமைந்துள்ளதும் ''எண்டருகஹாகும்புற'' என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. டீ. சீ. ஏ. பெரேரா தயாரித்த 02.04.2001 ஆந் திகதிகொண்ட 2124 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 4 என அடையாளமிடப்பட்டு காட்டப்படும் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 4 என்பதற்கு எல்லைகளாக -வடக்கில் : துண்டு 2 ; கிழக்கில் : கர்தினால் குரே மாவாத்தை ; தெற்கில் : சிவஞானசுந்தரத்தின் காணி ; மேற்கில் : துண்டு 3 என்பன அமைந்துள்ளன. மேற்படி 2124 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு நான்கு தசம் மூன்று சைவர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 4.30பே.) இது கொழும்பு காணிப் பதிவகத்தில் B 731/274 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே விவரிக்கப்படும் 2124 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 2 என்பதன் வழியாக வரியுரிமையையும் பொது உரிமைகளையும் சேர்த்து.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, ராகம் பற்று வத்தளை பிரதேச சபையின் ஹெந்தளை உப அலுவலகத்தின் எல்லைகளுக்குட்பட்ட ஹெந்தளை கர்தினால் குரே மாவத்தையில் அமைந்துள்ளதும் "எண்டருகஹாகும்புற" என அழைக்கப்படுவதுமான காணியின் 2001.04.02 ஆந் திகதி கொண்ட 2124 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 என அடையாளமிடப்பட்டு காட்டப்படும் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். மேற்படி துண்டு 2 என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : இதே காணியின் துண்டு 5 ; கிழக்கில் : கர்தினால் குரே மாவத்தை மற்றும் துண்டு 3 ; தெற்கில் : துண்டுகள் 4, 3 ; மேற்கில் : துண்டு 1 என்பன அமைந்துள்ளன. மேற்படி 2124 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு மூன்று தசம் ஒன்பது இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 3.92பே.) இது கொழும்பு காணிப் பதிவகத்தில் B 731/276 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்,
(மேற்கு வலயம் 01)

மக்கள் வங்கி,
வலயத் தலைமை அலுவலகம் - (மேற்கு வலயம் 01)
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01

10-634

---

## மக்கள் வங்கி – யூனியன் பிளேஸ்

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 30.05.2008 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"கங்காணிகே மைக்கல் சில்வா, ஹெட்டியஹண்டி சித்ரா ஜராங்கனி சில்வா, கங்காணிகே வருண சுதேஷ் சில்வா ஆகியோர் மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி ஏ. ஏ. எஸ். வசந்தா அமரசிங்க அத்தாட்சிப்படுத்திய 14.01.2004 ஆந் திகதிகொண்ட 6915 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால் இப்பொழுது மேற்படி 6915 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது நாலு இலட்சத்து நாற்பதாயிரத்து எண்ணூற்றி முப்பத்துமூன்று ரூபா எழுபத்துமூன்று சதம் (ரூபா 440,833.73) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் நாலு இலட்சத்து நாற்பதாயிரத்து எண்ணூற்றி முப்பத்துமூன்று ரூபா எழுபத்துமூன்று சதத்தையும் (ரூபா 440,833.73) நாலு இலட்சத்து நாற்பதாயிரத்து எண்ணூற்றி முப்பத்துமூன்று ரூபா எழுபத்துமூன்று சதத்தின்மீது (ரூபா 440,833.73) 10.06.2007 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு பதினைந்து தசம் ஏழு ஐந்து சதவீதப்படி (15.75%) மேலும் வட்டியையும் வேறு அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 6915 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஏர்வின் பெரேரா என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லே பற்று கோட்டே மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட பிட்ட கோட்டேயில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. ஜே. நாணயக்கார தயாரித்த 1976, மாச்சு 3 ஆந் திகதிகொண்ட 1895 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 ஏ என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்டதும் ''பெலென் கஹாவத்த'' என அழைக்கப்படுவதுமான காணித்துண்டு முழுவதும் (உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. ஜே. நாணயக்கார தயாரித்த 1973, திசெம்பர் 27 ஆந் திகதி கொண்ட 1723 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 என்பதன் உட்பிரிவொன்று) அதன்கண் அமைந்துள்ள 23 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம்கொண்ட (2 ஆம் ஒழுங்கை) கட்டிடத்துடன் சேர்த்து. மேற்படி துண்டு 1 ஏ என்பதற்கு எல்லைகளாக : வடக்கில் : துண்டு 1சீ ; கிழக்கில் : துண்டு 1பீ ; தெற்கில் : 1723 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 2 ; மேற்கில் : 2 ஆம் ஒழுங்கை என்பன அமைந்துள்ளன. மேற்படி 1895 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.5பே.) இது கல்கிசை காணிப்பதிவகத்தில் எம் 1133/292 என்பதன்கீழ் பதிவுசெய் யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லே பற்று கோட்டே மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட பிட்டகோட்டேயில் அமைந்துள்ளதும் (மேற்படி 1723 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 என்பதன் உட்பிரிவொன்றாகிய) மேற்படி 1895 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1பீ என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள 23 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம்கொண்ட (2ஆம் ஒழுங்கை) கட்டிடத்துடன் சேர்த்து. இதற்கு எல்லைகளாக : வடக்கில் : துண்டு 1சீ; கிழக்கில் : 27 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் (2 ஆம் ஒழுங்கை) கொண்ட ஆதனம் ; தெற்கில் : 1723 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 2 ; மேற்கில் : துண்டு 1 ஏ என்பன அமைந்துள்ளன. மேற்படி 1895 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு நாலு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.4.25பே.). இது கல்கிசை காணிப்பதிவகத்தில் எம் 1133/197 என்பதன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி துண்டு 1ஏ மற்றும் 1பீ என்பன உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. பீலிக்ஸ் டயஸ் தயாரித்த 1990 திசெம்பர் 15 ஆந் திகதிகொண்ட 386 ஆம் இலக்க அண்மைய நில அளவை வரைபடத்தின்படி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றன :-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லே பற்று ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகர சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. பீலிக்ஸ் டயஸ் தயாரித்த 1991, திசெம்பர் 1 ஆந் திகதிகொண்ட 386 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படுவதும் ''பெலென் கஹாவத்த'' என அழைக்கப்படுவதுமான காணியில் துண்டு X என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள 23 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம்

(2ம் ஒழுங்கை) கொண்ட கட்டிடத்துடன்சேர்த்து. இதற்கு எல்லைகளாக வடக்கில் : 21 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் (2 ஆம் ஒழுங்கை) கொண்ட வளவுகள் ; கிழக்கில் : 27 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் (2 ஆம் ஒழுங்கை) கொண்ட வளவுகள் ; தெற்கில் : 25 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் (2 ஆம் ஒழுங்கை) கொண்ட வளவுகள் ; மேற்கில் : 2 ஆம் ஒழுங்கை என்பன அமைந்துள்ளன. மேற்படி 386 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன்பரப்பளவு ஒன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.9.25பே.).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்,
(மேற்கு வலயம் 01).

மக்கள் வங்கி,
வலயத் தலைமையலுவலகம்,
(மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

10-637

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

2008.09.12 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-

"பிரசித்த நொத்தாரிசு எம். ஏ. டி. முனசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 1996.03.19 ஆந் திகதியிட்ட முறி இல. 1639 இன் பேரில் உடுகம்பொல, மினுவாங்கொடை ரோட், இல. 187/C ஐச் சேர்ந்த சட்டத்தரணி திருமதி வீரசேகர முதியான்சேலாகே அனுலாவதி என்பவரிடமிருந்து மேலதிகப் பற்று கணக்குக்காக முதலும் 1999.05.17 (கடன் பெறுநர் மரணித்த நாள்) வரை கூட்டு வட்டியும் இருபத்தைந்து இலட்சத்து பதினோராயிரத்து எழுநூற்று ஐம்பத்தேழு ரூபா அறுபத்தொன்பது சதங்களும் (25,11,757.69) வருமதியாக உள்ளது.

மேற்குறிப்பிட்ட முறி இல. 1639 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட இருபத்தைந்து இலட்சத்து பதினோராயிரத்து எழுநூற்று ஐம்பத்தேழு ரூபா அறுபத்தொன்பது சதமும் (25,11,757.69) அத்துடன் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு மஹாநாம ட்ரைவ, இல. 474, பிற்றகோட்டே, கோட்டே என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர்கள் திரு. ரஞ்சித் சிறிவர்தன மஹாநாமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மினுவாங்கொடை கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### அட்டவணை

விற்பனைக்குரிய ஆதனம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை டாஸியபற்றுவில் உடுகம்பொலவில் அமைந்த பாத்தஹெலந்த என அழைக்கப்படும் காணித்துண்டு வடக்கிலும், மேற்கிலும் அலவத்துரகே அலியஸ் பெரேரா மற்றும் ஏனையோரின் வயலும் கிழக்கில் பெருந்தெருவும் ; தெற்கில் : தெபானிஸ் பெர்னான்டோவின் வாரிசுகளின் காணியும் எல்லைகளாகக் கொண்டு முப்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 30பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், வீடு மற்றும் சகலதும் ஆகும். இது கம்ப1ா காணிப் பதிவகத்தில் A 39/70 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. எம். எப். எஸ். வீரசிங்ஹ தயாரித்த 1995, செத்தெம்பர் 17 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 100 இன்படி பின்வருமாறு விவரிப்பட்டுள்ளது:-

; :மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை டாஸியபற்றுவில் மினவாங்கொடை பிரதேச சபை எல்லைகளுள் உடுகம்பொலயில் அமைந்த மினுவாங்கொடை ரோட் வரிமதிப்பிலக்கம் 159, 169, 171, 173 ஐக் கொண்ட "பாத்தஹெலந்த" என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 100 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட காணித்துண்டு வடக்கில் : எலயும் அனுலா வீரசேகர உரிமைகோரும் காணியும் ; கிழக்கில் : பிரதான ரோட்டும் ; தெற்கில் : தெவட்டயும் (4 அடி அகலம்) ; மேற்கில்: எலயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 100 இன்படி இருபத்தாறு தசம் ஒன்பது சைபர் (0ஏ. 0றூ. 26.90பே.) அல்லது ஹெக்டேயர்கள் சைபர் தசம் சைபர் ஆறு எட்டு சைபர் நான்கு (0.06804ஹெக்.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. விஜேசிங்ஹ,
கிளை முகாமையாளர்,

இலங்கை வங்கி,
மினுவாங்கொடை கிளை.

10-658

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**பொலன்னறுவை மாவட்டத்தில், லங்காபுர தல்பொத்த பிரதேச சபை எல்லைகளுள் தமன்கடுவ கோரளை மெதபற்றுவில் கூமடிய**

**கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 78 யு இல் அபயபுர, கிராமத்தில் அமைந்த பனஸ்ஹதர இடம என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. முதுன்கொத்கே தயாரித்த 1997.02.26 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1308 இல் விபரித்த ஈடுவைத்த ஆதனம் துண்டு 1 மற்றும் துண்டு 2 இதன் விஸ்தீரணம் 1ஏ. 1றூ. 0பே.**

*2008.09.12 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-*

*"பிரசித்த நொத்தாரிசு செனவிரத்ன பண்டா சங்கக்கார அத்தாட்சிப்படுத்திய 2000.01.25 ஆந் திகதியிட்ட முறி இலக்கம் 1885 இன் பேரில் ரத்னா அரிசி ஆலை, மஹசென் பெதச, 28 ஆவது மைல்கல், கதுருவெல என்னும் முகவரியைச் சேர்ந்த லங்கேஸ்வரகே ஆரியரத்ன என்பவரிடமிருந்து மேலதிகப் பற்று கணக்கு மீது 2008.07.31 வரை முதலும் வட்டியும் முப்பத்தைந்து இலட்சத்து நாற்பத்தையாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று ஒன்பது ரூபா இருபத்தாறு சதம் (35,45,599.26) அத்துடன் இருபது இலட்சம் ரூபாவில் (ரூ. 20,00,000) ஆண்டுக்கு இருபத்துநான்கு (24%) வீதத்தில் 2008.08.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,*

*மேற்குறிப்பிட்ட முறி இல. 1885 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட முப்பத்தைந்து இலட்சத்து நாற்பத்தையாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று ஒன்பது ரூபா இருபத்தாறு சதம் (35,45,599.26) அத்துடன் 2008.08.01 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 290, ஹவ்லொக் ரோட், கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமைய வும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி தொடர்பாடல் முகாமையாளர் (அறவிடல் தொகுதி)க்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படு கின்றது."*

**அட்டவணை**

*வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்தில், லங்காபுர தல்பொத்த பிரதேச சபை எல்லைகளுள் தமன்கடுவ கோரளை மெதபற்றுவில் கூமடிய கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 78 ஏ இல் அபயபுர கிராமத்தில் அமைந்த "பனஸ்ஹதரே இடம" என அழைக்கப்படும் காணியிலிருந்தும் பொலன்னறுவை மாவட்ட நீதிமன்ற வழக்கு இல. 6263 இல் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. முதுன்கொத்கே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1997.02.26 ஆந் திகதியிட்ட அளவை வரைபடம் இல. 1308 இல் விபரித்த துண்டு 1 மற்றும் துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு மேற்குறிப்பிட் வரைபடத்தின் படி வடக்கில் : F.C.P. பொ 70 இல் துண்டு 176 உம், F.C.P. பொ 70 இல் துண்டு 267 இன் பகுதியும் ; கிழக்கில் : F.C.P. பொ 70 இல் துண்டு 269 இன் பகுதியும் F.C.P. பொ 70 இல் துண்டு 290 உம் ; தெற்கில் : F.C.P. பொ 70 இல் துண்டுகள் 265, 266 மற்றும் 290 உம் ; மேற்கில் : F.C.P. பொ 70 இல் துண்டுகள் 176, 266 மற்றும் 265 எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1308 இன்படி ஒரு ஏக்கர் ஒரு றூட் (1ஏ. 1றூ.) விஸ்தீரணமுடைய காணியும், நிரந்தரக் கட்டடமும், நெற் களஞ்சியமும், இரண்டு கிணறுகளும், 03 நீராவிக் கொதிகலன்கள், இயந்திர சாதனங்கள் ஆகியவற்றுடன் நிரந்தரக் கட்டிடங்களும், வேலையாட்களுக்கான அறைகளும், கொதிகலன்கள், நீர்த் தொட்டியுடன் நிரந்தரக் கட்டிடங்களும் சீமெந்துத் தரைத்தளம் மற்றும் தோட்டமும் ஆகும்.*

*மேற்குறிப்பிட்ட காணி பின்வரும் காணியிலிருந்து ஒரு ஏக்கர் ஒரு றூட் என பிரித்து மீளளவை செய்யப்பட்டுள்ளது:-*

*மேற்குறிப்பிட்ட கூமடிய கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 78 ஏ இல் அபயபுர கிராமத்தில் அமைந்த "பனஸ்ஹதரே இடம" என அழைக்கப்படும் காணி அளவையாளர் நாயகம் தயாரித்த F.C.P. பொ வரைபடம் இல. 70 இல் விபரித்த துண்டு 267 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டுகள் 176 மற்றும் 268 உம் ; கிழக்கில் :துண்டுகள் 268 மற்றும் 290 உம் ; தெற்கில் : துண்டுகள் 265 மற்றும் 266 உம் ; மேற்கில் :துண்டு 176 எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. F.C.P. பொ 70 இன் படி மூன்று ஏக்கர் ஆறு பேர்ச்சஸ்கள் (3ஏ. 0றூ. 6பே.) விஸ்தீரணமுடையது. இது பொலன்னறுவை காணிப் பதிவகத்தில் L.D. O. 3/2/427 இல் பதிவு செய்யப்பட்டது.*

*லங்காபுர பிரதேச செயலாளர் வழங்கிய 1998.11.11 ஆந் திகதியிட்ட NCP/LP/LD/7/20(1) இலக்கக் கடிதம் மற்றும் சுவர்ணபூமி உறுதி இல. பொ/பிர/6923 இன் கீழ் மேற்குறிப்பிட்ட கடமைப்பட்டவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது.*

*பிரசித்த நொத்தாரிசு செனவிரத்ன பண்டா சங்கக்கார அத்தாட்சிப்படுத்திய 2000.01.25 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 1885.*

*பணிப்பாளர் சபை கட்டளைப்படி,*

*எஸ். டி. சில்வா,*
*தொடர்பாடல், முகாமையாளர்,*
*(அறவிடல், தொகுதி).*

*இலங்கை வங்கி,*
*அறவிடல் பிரிவு,*
*இல. 4, இலங்கை வங்கி மாவத்தை,*
*கொழும்பு 1.*

*10-661*

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*2005.06.09 இல் நடைபெற்ற இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது:-*

*"பிரசித்த நொத்தாரிசு எஸ். தாயுமானவன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.03.03 ஆந் திகதிய இலக்கம் 11978 கொண்ட ஈட்டுமுறியின் பேரில் அலகொலகால, (B) பொறகஸ் என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. விமலவங்ச ஆரச்சிலகே தயா விலியம் பிரேமரத்ன, திருமதி கொலுவாமரக்கலகே ராணி என்பவர்களினால் முதலும் 2005.03.02 வரையிலான வட்டியுமாக*

இரண்டு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து நூற்று எண்பத்தாறு ரூபா இருபத்துநான்கு சதமும் (ரூ. 2,55,186.24) அத்துடன் இரண்டு இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து முந்நூற்று இருபது ரூபாவிற்கு (ரூபா 2,33,320.00) 2005.03.03 ஆந் திகதி தொடக்கம் முழுப்பணம் முற்றாகச் செலுத்தி முடிக்கும் வரை ஆண்டுக்கு பதினெட்டு (18%) வீதத்திலான வட்டியும் இலங்கை வங்கிக்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் செலுத்த வேண்டியுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட 2004.03.03 ஆந் திகதிய இலக்கம் 11978 கொண்ட ஈட்டுமுறியின் மேல் வருமதியாகவுள்ளஇரண்டு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து நூற்று எண்பத்தாறு ரூபா இருபத்துநான்கு சதமும் (ரூ. 2,55,186.24) அத்துடன் 2005.03.03 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடக்கூடிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்துள்ள இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலக்கம் 24, ரொறிங்டன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர்கள் திருவாளர்கள் சொக்மன் சமரவிக்ரம அவர்களுக்கு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்குமிணங்க இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், உடுகிந்த பிரிவு, உடபளாத்த கோறளை, ஹறக்கமகந்த கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. விக்கிரமசிங்க அவர்களால் தயாரிக்கப்பட்ட 1976.04.02 ஆந் திகதிய வரைபடத்தில் துண்டு 15 எனக் காட்டப்பட்டு விவரிக்கப்பட்டுள்ள "அபவெலவத்த" என்றழைக்கப்படும், மேற்கூறிய வரைபடம், விவரணத்திற்கிணங்க வடக்கின்: அதே வரைபடத்தின் துண்டு 17 உம், 18 உம் ; கிழக்கின் : அதே வரைபடத்தின் 14 ஆந் துண்டு; தெற்கில் : அதே வரைபடத்தில் துண்டு 13 உம் ; மேற்கில்: அதே வரைபடத்தின் 19 ஆம் துண்டு எல்லைகளாகக் கொண்ட ஒரு ஏக்கர் விஸ்தீரணமுடைய (1ஏ. 0றூ. 0பே.) பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணி முழுவதும் அதற்குள் உள்ள அனைத்துமாகும். இது பதுளை மாவட்டக் காணிப் பதிவகத்தில் சி. 545/33 வொலியூம்/பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. தர்மரத்ன,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
நுவரெலியா.

10-663

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**(ரெலிவீவ் (பிரை) லிமிட்டெட்டின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைத்த ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பதுளை மாநகர சபை எல்லைகளுள் பதுளை நகரம் மற்றும் எல்லைகளுள் அலுத்வெலகம யில் அமைந்த 'பிற்றவத்த கன்னிலே கும்புர' என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான காணி.)**

2008.09.12 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-

"பிரசித்த நொத்தாரிசு பி. பி. ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 1995.02.28 ஆந் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட முறி இலக்கம் 2604 இன் பேரில் நுகேகொடை, கங்கொடவில, ஹைலெவல் ரோட், இல. 522/1, (தற்சமயம் முகவரி இல. 466, 1 ஆம் தளம், காலிறன், காலி ரோட், கொழும்பு 03 என்னும் முகவரியைச் சேர்ந்த ரெலிவீவ் (பிரை) லிமிட்டெட்டிடமிருந்து மேலதிகப்பற்று கணக்கு மீது முதலும் 2008.04.30 வரை வட்டியும் ஐம்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து நாநூற்று முப்பத்தெட்டு ரூபா முப்பத்தாறு சதங்களும் (ரூ. 53,56,438.36) அத்துடன் பதினைந்து இலட்சம் ரூபாவில் (ரூ. 15,00,000) ஆண்டுக்கு இருபத்தைந்து தசம் ஐந்து (25%) வீதத்தில் 2008.05.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட முறி இல. 2604 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஐம்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து நாநூற்று முப்பத்தெட்டு ரூபா முப்பத்தாறு சதங்களும் (ரூ. 53,56,438.36) அத்துடன் 2008.05.01 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 290, ஹவ்லொக் ரோட், கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக் கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி தொடர்பாடல் முகாமையாளர் (அறவிடல் தொகுதி)க்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

அட்டவணை

முதலாவது அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில், பதுளை மாநகர சபை எல்லைக்குள் பதுளை நகர மற்றும் எல்லைகளுள் அலுத்வெலகமவில் அமைந்த "பிற்றவத்த கன்னிலே கும்புர" என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. பி. டபிள்யூ. வெல்கொல்ல தயாரித்த 1960, மார்ச் 26 ஆந் திகதியிட்ட அளவை வரைபடம் இலக்கம் 1843 இல் துண்டு 1 என விபரித்த குறித்த மேற்கின் பிரிக்கப்பட்ட இரண்டில் ஒரு பங்கு வடக்கில்: கம்பி வேலியும் மேற்குறிப்பிட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. பி. டபிள்யூ. வெல்கொல்ல தயாரித்த வரைபடம் இல. 1048A இல் துண்டு இல. 1 உம் ; கிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1843 இல் துண்டு இல. 2 உம் கம்பி வேலியும் ; தெற்கில் : பண்டாரநாயக்க மாவத்தையும் ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1048 A இன் துண்டு இல. 9 ம் கம்பி வேலியும் எல்லைகளாகக் கொண்டு இருபத்தொன்பதுடன் பதினாறில் பதின்மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 29 13/16பே.) விஸ்தீரணமுடைய காணியும் வரிமதிப்பிலக்கம் 37/2 ஐக் கொண்ட கட்டிடமும் அங்கு அமைந்துள்ள சகலதும் மற்றும் பதுளை மாநகர சபை வோர்ட் இல. 2 அமைந்த

மேற்குறிப்பிட்ட காணிக்கு சம்பந்தப்பட்ட சகலதும் ஆகும். இது பதுளை காணிப் பதிவகத்தில் A 71/117 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

எஸ். டி. சில்வா,
தொடர்பாடல், முகாமையாளர்,
(அறவிடல், தொகுதி).

இலங்கை வங்கி,
அறவிடல் பிரிவு,
இல. 4, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 1.

10-662

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

2008.09.12 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-

"பிரசித்த நொத்தாரிசு திருமதி என். பி. சந்திரிக்கா அத்தாட்சிப்படுத்திய 2003.11.21 ஆந் திகதியிட்ட முறி இலக்கம் 994 இன் பேரில் ஹல்விட்டிகல, குடியிருப்பு 11 ஆம் கட்டம் கித்துல்தொல என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. தொலமாவத்த துராகே சரத் என்பவரிடமிருந்து முதலும் 2008.08.06 வரை வட்டியும் நான்கு இலட்சத்து தொண்ணூறாயிரத்து அறுநூற்று பதினைந்து ரூபா தொண்ணூற்றைந்து சதங்களும் (ரூ. 4,90,615.95) அத்துடன் இரண்டு இலட்சத்து நாற்பத்தையாயிரத்து எந்நூற்று முப்பது ரூபாவில் (ரூ. 2,45,830) ஆண்டுக்கு 29% வீதத்தில் 2008.08.07 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட முறி இல. 994 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட நான்கு இலட்சத்து தொண்ணூறாயிரத்து அறுநூற்று பதினைந்து ரூபா தொண்ணூற்றைந்து சதங்களும் (ரூ. 4,90,615.95) அத்துடன் 2008.08.07 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 39, வில்பிரெட் குணசேகர மாவத்தை, கோட்டை, மாத்தறை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. எம். எச். பத்மானந்த சிறிவர்தனவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி தவலம கிளை, கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

**அட்டவணை**

தென் மாகாணம், காலி மாவட்டம், ஹினிதும்பற்று, தவலம பிரதேச செயலகத்தில் தலங்கல்ல கிழக்கு (288 F) கிராம உத்தியோகத்தர் பிரிவினுள் தலங்கல்ல கிராமத்தில் அமைந்த வரைபடம் இல. அ.ஓ.கி 489 இல் விபரித்த ஹெடவக்கொடகந்த என அழைக்கப்படும் காணியின் காணித்துண்டு வடக்கில் : துண்டு 192 ஆம் (அரசாங்கக் காணி) ; கிழக்கில் : துண்டு 140 (அரசாங்கக் காணி) ; தெற்கில் : துண்டு இலக்கங்கள் 10 மற்றும் 14 உம் ; மேற்கில் : துண்டு இல. 8 உம் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டேயர்கள் சைபர் தசம் ஐந்து இரண்டு ஐந்து (0.525 ஹெக்.) விஸ்தீரணமுடையது. இது காலி காணிப்பதிவகத்தில் L.D. O. G48/12 இல் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜி. டி. யு. கருணாரத்ன தயாரித்த 2000.12.30 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 6050 இன் படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:-

மேற்குறிப்பிட்ட தலங்கல்ல கிராமத்தில் அமைந்த ஹெடவக்கொடகந்த என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 6050 இல் விபரித்த துண்டு A என அடையாளமிட்ட காணித்துண்டு - வடக்கில் : டி. எம். டி. சோமதாச உரிமைகோரும் காணியும் அதே காணியின் பாகமும் ; கிழக்கில் : அதே காணியின் பாகமும் டபிள்யூ. எம். எரத்ன உரிமைகோரும் காணியும்; தெற்கில் : டபிள்யூ. எம். எரத்ன மற்றும் டி. ஜி. துங்கபால உரிமைகோரும் காணியும் ; மேற்கில் : டபிள்யூ. எம். எரத்ன, டி. ஜி. துங்கபால, எம். சோமபால மற்றும் எம். எஸ். விஜேதுங்க ஆகியோர் உரிமைகோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 6050 இன் படி ஒரு ஏக்கர் ஒரு றூட் ஏழு தசம் ஆறு பேர்ச்சஸ்கள் (1ஏ. 1றூ. 7.6பே.) விஸ்தீரணமுடைய காணியும் அத்துடன் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள் மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

திரு. யூ. ஜி. உபசேன,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
தவலம.

10-664

---

### ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(செட்டிவீதி கிளை) — ஜோசப் டேமன்ட் றொனிபேர்ட் பூபால ராயர்

ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2007, ஒற்றோபர் 24 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"ஜோசப் டேமன்ட் றொனிபேர்ட் பூபால ராயர் என்பவர், கடப்பாடுடையவராக கொழும்பு ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ. ஆர். டி சில்வா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, ஒற்றோபர் 13 ஆந் திகதிய 1961 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், அத்துடன் 2007, ஓகத்து 31 ஆந் திகதி அன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி

தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் ஒரு கோடியே ஏழு இலட்சத்து மூவாயிரத்து எழுபத்து நான்கு ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூ. 1,07,03,074.69) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1961 ஆம் இலக்க முறி மூலம், ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும், வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 1,07,03,074.69 கொண்ட பணத்தொகையை, 2007, செத்தெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைக்காரர் ஆர். எஸ். மகாநாம பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் கொட்டாஞ்சேனை கிழக்கு, வட்டாரம் இல. 7 இல், கே. சிரில் சி. பெரேரா மாவத்தையில் அமைந்துள்ளதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஏ. பீரிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, ஓகத்து 12 ஆந் திகதிய 5056 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 1 என அடையாளமிடப பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றுமெல்லாவற்றுடனும் சேர்த்து. அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 1 இன் எல்லைகள் - வடக்கு : 1150 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 3 (வீதிக்கான ஒதுக்குகை) மற்றும் காணித்துண்டு 4 ; கிழக்கு : காணித்துண்டுகள் 3 மற்றும் 2 ; தெற்கு : காணித்துண்டு 2 மற்றும் கே. சிரில் சி. பெரேரா மாவத்தை, 80 மற்றும் 82 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட வளவுகள் ; அத்துடன் மேற்கு : கே. சிரில் சி. பெரேரா மாவத்தை. 80 மற்றும் 82 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட வளவுகள், 1150 என்னும் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 3 (வீதிக்கான ஒதுக்குகை) மற்றும் காணித்துண்டு 4. அத்துடன் 5056 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் ஒன்று தசம் மூன்று ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 1.37பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

